# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 07 | தமிழ் மொழியும் இலக்கியமும் | நேரம் :- இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..............................

## பகுதி I

- ❖ இவ் வினாத்தாளிற்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதுக.
- ❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. பைன் மரத்தின் கட்டை எடை குறைவானதாகவும் வலுவுள்ளதாகவும் இருக்கும். இங்கு எடை என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
1) நரை 2) குரை 3) நிரை 4) நிறை.

02. நாம் நினைப்பவற்றை மனதில் உயர்ந்தவையாக நினைக்க வேண்டும். இங்கு மனம் என்பதன் ஒத்த கருத்துச்ள சொல்.
1) உள்ளம் 2) அறம் 3) புறம் 4) மறம்.

03. சேர மன்னன் திருவுடையாரைவிட அறிவுடையாரையே பெரிதும் மதித்து வந்தான். இங்கு மதித்தல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1) மரியாதை செலுத்துதல். 2) அவமதித்தல்.
3) தலை வணங்குதல். 4) அப மதித்தல்.

04. சூரியன் கிழக்கு வானில் உதித்தது. இங்கு உதித்தது என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1) தோன்றவில்லை 2) தோன்றியது.
3) பறந்தது. 4) மறைந்தது.

05. மனைவியை இழந்தவன் தபுதாரன் என்பது போல கணவனை இழந்தவள்
1) கன்னி 2) தலைவி 3) விதவை 4) பாடகி

06. தமிழில் உள்ள உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை.
1) 216 2) 247 3) 5 4) 30

07. பெண்கள் தேயிலைக் கொழுந்து பறித்தனர். இதில் வந்துள்ள எழுவாய்.
1) பறித்தனர் 2) பெண்கள் 3) கொழுந்து 4) தேயிலை

08. கிரந்த எழுத்துக்களை மட்டும் கொண்ட தொகுதி.
1) ப, வ 2) க,ச 3) ம,ஜ 4) ஸ,ஜ

09. பின்வருவனவற்றுள் இணைமொழிச் சொல்லாக அமைவது.
1) மேலே மேலே  2) கமகம  3) சீரும் சிறப்பும்  4) ஓடி ஓடி.

10. மாதம், சந்திரன், ஒரு நாளின் பெயர் எனும் பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்
1) மதி  2) திங்கள்  3) தை  4) பிறை.

11. வண்ணக்கிளி பழங்களை உண்டது. இங்கு வந்துள்ள எழுவாய் அடைமொழி
1) வண்ண  2) பழங்கள்  3) கிளி  4) உண்டது.

12. பாலன் பந்தை அடித்தான் என்பது.
1) கார் காலம்  2) நிகழ்காலம்  3) எதிர் காலம்  4) இறந்த காலம்.

13. அடடா எத்தனை புதுமை என்பதில் இடம் பெற வேண்டிய நிறுத்தக் குறி.
1) காற் புள்ளி  2) விட்டிசைக் குறி  3) வியப்புக் குறி  4) சிறுகோடு.

14. ஒட்டுறவின்றி இணைந்திருத்தலை விளக்கும் உவமைத் தொடர்.
1) இலைமறை காய் போல  2) ஓடும் புளியம் பழமும் போல
3) கடன்பட்டார் நெஞ்சம் போல  4) வாடும் பயிருக்கு வான்மழை போல

15. பக்ஸ் (FAX) என்பதன் கலைச்சொல்.
1) தொலைநகல்  2) மின்னஞ்சல்  3) வையகவிரிவுவலை  4) எண்மானம்.

16. இருபத்தைந்தாம் ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
1) அமுத விழா  2) வெள்ளி விழா  3) பவள விழா  4) பொன்விழா.

17. உறவு முறைக் கடிதம் ஒன்றில் இடம்பெறாத உறுப்பு
1) முகவரி  2) விளிப்பு  3) ஒப்பம்  4) உள் முகவரி.

18. பின்வருவனவற்றுள் ஒன்றன்பாலாக அமைவது.
1) அது  2) மாடுகள்  3) அவை  4) அவள்.

19. "செந்தமிழ் போற்றிய சேரன்" கதையின் ஆசிரியர்.
1) கி.வா.ஜகந்நாதன்  2) கவிஞர் அழக சுந்தர தேசிகர்
3) எச். எம். பி. மொஹிதீன்  4) த.கி. குப்புசாமி ஆழ்வார்.

20. மலரின் கூட்டம் செண்டு என்பது போல மயிலின் கூட்டம்.
1) குழாம்  2) வரிசை  3) ஆயம்  4) தொடர்.

(1½X20=30 புள்ளிகள்)

## பகுதி II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. உமது வகுப்பறையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்படைக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1) இக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பாட அலகு யாது?
2) இக் கணிப்பீடு தொடர்பாக ஆசிரியர் உமக்கு வழங்கிய ஆலோசனைகள் 3 எழுதுக?
3) இக் கணிப்பீட்டை மேற்கொண்ட போது நீர் எதிர்நோக்கிய பிரச்சனைகள் 3 எழுதுக?
4) இக் கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் 2 எழுதுக?

(2+3+3+2=10 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.

1) நான் விரும்பும் பெரியார்.
2) இயற்கை தரும் இன்பம்.
3) உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம்.
4) பென்சிலின் சுயசரிதை.

(20 புள்ளிகள்)

03. டெங்கு எனும் உயிர் கொல்லியிலிருந்து எம்மைக் காப்பதற்குப் பொருத்தமான துண்டுப்பிரசுரம் ஒன்றை 75 சொற்களுக்குக் குறையாது எழுதுக. (10 புள்ளிகள்)

04. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

1) கருங்காற் குறிஞ்சி எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும்?
2) "கூப்பிய கைக் காந்தன்" என்பதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
3) பேனாவை விட பென்சிலினால் பெறக் கூடிய நன்மைகள் 2 எழுதுக?
4) "யாம் ஐவேம்" என்ற பாடலில் சிறுமியின் பெயர் யாது? அவளுக்கு எத்தனை வயது?
5) சேர மன்னனின் சபைக்கு வந்த புலவர் யார்?

(2x5=10 புள்ளிகள்)

05. பின்வரும் பாடலைப் படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

ஆதவனும் கீழ்த்திசையில் தோன்றிட
ஆகா! இவ் உலகம் என்னே அழகு
சீதம் மிகு சோலையில் தென்றல் வீச
செம்மலர்கள் முகம் திறந்து தேன்சிந்திட
மோதிவிழும் வண்டுகளின் மூக்கினிலே
மகரந்த தாதுக்கள் ஒட்டிவாசம் வீச
கிளையிலே கிளிகள் கொஞ்சி மகிழ்ந்திட
கிளையிடையே தாவுகின்ற கதிரைக்கண்டே.

1) இப்பாடல் எக்காட்சியை வர்ணிக்கின்றது?
2) ஆதவன் தோன்றிய பின் சோலை எவ்வாறு காணப்படுகிறது?
3) வண்டுகளின் மூக்கில் ஒட்டிக் காணப்படுவது எது?
4) ஒத்த சொல் தருக.
அ) உலகம்
ஆ) ஆதவன்
இ) வாசம்
ஈ) மலர்

அல்லது

பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டார் பாடல்களாகும். இவை நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் இப் பாடல்களின் மையப் பொருளாக விளங்குகின்றன. நாட்டார் பாடல்கள் இலக்கண வரம்புக்கு உட்படாது இருப்பதும், எழுத்தறிவு கிடைக்கப் பெறாத பாமர மக்களால் இசைக்கப்படுவதும் எழுதியவர் யாரென்று அறிந்து கொள்ள முடியாதிருப்பதும் அவற்றின் தனித்துவமான இயல்புககளாகும். நாட்டார் பாடல்களை நாட்டுப் பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள், பாமரப் பாடல்கள் எனப் பலவாறு அழைப்பார்கள்.

1) நாட்டார் பாடல்களின் மையப் பொருளாக விளங்குபவை எவை?
2) நாட்டார் பாடல்களின் தனித்துவமான இயல்புகள் எவை?
3) நாட்டார் பாடல்களின் வேறு பெயர்கள் எவை?
4) எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.
1) பிறப்பு
2) பாமரர்
3) வாழ்வு
4) புறம்

(10 புள்ளிகள்)

06.

அ) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக.
1) கலகல
2) கண்ணீரும் கம்பலையும்
3) குடுகுடு

(6 புள்ளிகள்)

ஆ) வழு நீக்கி எழுதுக.
தூக்கத்தினால் கழைப்பு நிங்கித் தெழிந்திருந்த அவரது அரிவில் அப்பொழுது தான், தாம் உறங்கியது முரசு கட்டிலில் என்பதும், அதில் ஏறியிருந்தது அரசனுக்குச் செய்த பெருந்தவராகும் என்பதும் விளக்கமாய்த் தோன்றின.

(4 புள்ளிகள்)



தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
தமிழ் Medium
தரம் 01-02 2000/=
தரம் 03-05 2500/=
தரம் 06-10 3000/=
English Medium
தரம் 06-07 3500/=
Education கல்வி அධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457